# <u>திருமங்கலம் நகராட்சி</u>

## <u>11.01.2021 அன்று நடைபெற்ற கூட்டப் பொருள் தீர்மானம்</u>

**1)15**வது மத்திய நிதிக் குழு பரிந்துரை மானியம் **2020–21** ன் கீழ் திருமங்கலம் நகராட்சிக்கு ரூ.**1,39,08,856/–** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண் 20452/2020/LA3 நாள்.**10.11.2020** ல் மேற்காணும் திடடத்தின் கீழ் முதற்கட்டமாக இந்நகராட்சிக்கு ரூ.**69,54,428/–** நிதியினை விடுவிக்கப்பட்டுள்ளதுடன் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 20452/2020/LA3 நாள்.**17.11.2020** ல் மேற்காணும் மானிய நிதியில் கீழ்காணும் பணிகளை மட்டுமே மேற்கொள்ளப்படவேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. குடிநீர் பணி (மழைநீர் சேகரிப்பு பணி உட்பட)
2. திடக் கழிவு மேலாண்மை பணி

மேற்காணும் சுற்றறிக்கையின் படி இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை தலைப்பின் கீழ் கீழ்காணும் இரண்டு பணிகளை மேற்கொள்வதற்கும் இப்பணியினை முதற்கட்டமாக இந்நகராட்சிக்கு விடுவிக்கப்பட்ட நிதி மற்றும் இரண்டாவது கட்டமாக இந்நகராட்சிக்கு விடுவிக்கப்படும் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Supply and Erection of 15TPD centralized Incenerator for Usilampatty Municipality and Tirumangalam Municipalities (Propotionate share for Tirumanglam Municipality 67%) | **125.29** |
| 2 | Hydraulic Backhoe Loader (JCB) Mini 3DX | **29.00** |
| | மொத்தம் | **154.29** |

**<u>அ.கு</u>**

1. அனுமதிக்கலாம்
2. மேற்காணும் பணிக்கு 15வது மத்திய நிதிக் குழு மானியத்தில் விடுவிக்கப்படும் நிதியினைக் காட்டிலும் கூடுதலாக ஏற்படும் செலவினத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் இருந்து ஈடு செய்து கொள்ள அனுமதிக்கலாம்.

ந.க.எண்.75/2021/இ1

**தீர்மானம் எண்.2242: அனுமதிக்கப்பட்டது.**

2)திருமங்கலம் நகராட்சியில் தினசரி 24 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் சேகரமாகின்றன. அதில் தரம் பிரிக்கப்பட்ட 13.00 மெட்ரிக் டன் அளவிலான மக்கும் குப்பைகள் (Bio degradable Waste) இந்நகர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 3 எண்ணிக்கையிலான பசுமை உரக்குடில் (Micro Comosting Centre) மற்றும் 2 எண்ணிக்கையிலான சிறிய வகை உரக்குடிலிகள் மூலமாக (Onsite Comosting centre) கையாளப்பட்டு உரமாக்கப்படுகின்றன. இதுதவிர சுமார் 1.3 மெட்ரிக் டன் அளவுள்ள குப்பைகள் மறு சுழற்சி அடிப்படையில் பயன்படுத்தத்தக்க உலர் கழிவுகள் (Recyclable dry waste) பிரித்தெடுக்கப்பட்டு மறு சுழற்சி செய்வதற்காக விற்பனை செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. மேலும், மறு சுழற்சிக்கு பயன்படுத்த இயலாத மற்றும் விற்பனை செய்ய இயலாத (Non Saleable Dry Waste) சுமார் 9.00 மெட்ரிக் அளவுள்ள டன் உலர் கழிவுகள் எரிபொருளாகப் பயன்படுத்த வேண்டி M/s. Dalmia, சிமெண்ட் நிறுவனத்திற்குச் சொந்தமான சிமெண்ட் ஆலைக்கு அனுப்பப்பட்டு வந்தது. மேற்படி நகராட்சியால் அனுப்பப்பட்டுவரும் குப்பைகளை பரிபொருளாக பயன்படுத்த இயலாதவை, ஈரமாக உள்ளது மற்றும் மேற்படி உலர் கழிவுகளை சரியாக தரம் பிரிக்கப்படவில்லை உள்ளிட்ட இதர காரணங்களை தெரிவித்து சிமெண்ட் ஆலை வாங்க மறுக்கும் நிலையில் மறுபடியும் குப்பைக் கிடங்கிலேயே மீண்டும் சேகரம் செய்யும் நிலை ஏற்படுகிறது. இது தவிர நகரை விட்டு வெகு தூரத்தில் அமைந்துள்ள மேற்படி தனியார் சிமெண்ட் ஆலைகளுக்கு பயன்படுத்த இயலாத விற்பனை செய்ய இயலாத உலர் கழிவுகளை கொண்டு செல்ல லாரி வாடகையாக ஒரு டன்னுக்கு சுமார் ரூ.6500/– வரை செலவிட நேர்வதால் நகராட்சிக்கு கூடுதல் செலவினம் ஏற்படுகின்றது. மேற்படி பயன்படுத்த இயலாத மற்றும் விற்பனை செய்ய இயலாத (Non Saleable Dry Waste) உலர் கழிவுகளை சிமெண்ட் ஆலைகளுக்கு கொண்டு சென்று எரியூட்டுவதற்குப் பதிலாக நகராட்சி மூலம் புதிதாக எரியூட்டும் உலை நிறுவி மேற்படி குப்பைகளை எரிபொருளாக பயன்படுத்தி விஞ்ஞான ரீதியில் கையாள ( Dry Waste Incinerator) வேண்டிய நிலை உள்ளது. மேலும், இத்திட்டத்னை செயல்படுத்த கூடுதல் தொகை செலவிட நேரிடும் என்பதால் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த இந்நகராட்சியையொட்டி அமைந்துள்ள உசிலம்பட்டி நகராட்சியில் மறு சுழற்சி செய்ய இயலாத குப்பைகைளையும் சேர்த்து கையாள புதிதாக தினசரி 15 மெட்ரிக் டன் கையாளத்தக்க வகையில் ஒரு எரியூட்டும் ஆலை (Centralized Incinerator) அமைக்கவும் மேற்படி திட்டத்தினை திருமங்கலம் நகராட்சி பகுதியில் செயல்படுத்தவும் அதற்கான திட்ட மதிப்பீடு **<u>ரூ.187.00</u>** இலட்சத்துக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் செலவினத்தை கீழ்க்கண்ட வகையில் இத்திட்டதின் கீழ் பங்கெடுத்துக்கொள்ளும் நகராட்சிகள் பகிர்ந்து கொள்ளத்தக்க வகையில் இத்திட்டத்தினை செயல்படுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | நகராட்சியின் பெயர் | திட்ட மதிப்பீடு இலட்சத்தில் | பங்குத் தொகை இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | திருமங்கலம் | ரூ.187.00 | 125.29 |
| 2 | உசிலம்பட்டி | | 61.71 |
| | **மொத்தம்** | | **187.00** |

மேலும், மேற்படி எரியூட்டு உலை நிறுவி உலையை இயக்குதல் மற்றும் தொடர் பராமரிப்பு பணியினை திருமங்கலம் நகராட்சியின் கண்காணிப்பில் மேற்கொள்ளவும், மேற்படி மாதாந்திர பராமரிப்பு கட்டணத்தை விகிதாச்சார முறையில் பகிரிந்து செலுத்தி இத்திட்டத்தினை செயல்படுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்படி திட்டத்தினை மத்திய அரசின் 15–வது நிதிக்குழு மான்ய தொகையிலிருந்து செயல்படுத்தவும் உசிலம்பட்டி நகராட்சி விகிதாச்சார அடிப்படையில் செலவினத்தை பகிரிந்து கொள்ளவும், தொடர் பராமரிப்னை தனியார் மூலம் திருமங்கலம் நகராட்சி கண்காணிப்பில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழுங்கலாம்.

**ந.க.எண்.75/2021/இ1**
**தீர்மானம் எண்.2243: அனுமதிக்கப்பட்டது.**

**3)அ)**அரசாணை (D) எண்.298, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி. IV) துறை, நாள் 02.09.2020 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.8763/2020/ஆர்–2, நாள் 29.09.2020–ன்படி கோவிட்–19 பொது ஊரடங்கு காலங்களில் 01.04.2020 முதல் 31.05.2020 வரை உள்ள (2 மாத காலம்) காலத்திற்கு உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படாத கடைகள்/ வரியில்லா இனங்களுக்கு வாடகைத் தொகையினை செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்து உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி கீழ்க்கண்ட பட்டியலில் கண்ட கடை குத்தகை இனங்கள் மற்றும் ஆண்டு குத்தகை இனங்களுக்கு 2 மாத காலங்களுக்கு வாடகை மற்றும் குத்தகைத் தொகை செலுத்துவதிலிருந்து விலக்களிக்கலாம்.

| வ.எண் | குத்தகை மற்றும் வாடகை கட்டிடங்கள் | மொத்த எண்ணிக்கை | ஆண்டு கேட்பு ரூ | 2 மாத கால கேட்பு ரூ |
|---|---|---|---|---|
| 1 | பேருந்து நிலைய உட்புற மற்றும் வெளிப்புறக் கடைகள் | 35 | 1398684 | 233114 |
| 2 | வண்டிப்பேட்டை கடைகள் | 7 | 143808 | 23968 |
| 3 | வாரச்சந்தைக் கடைகள் | 3 | 37272 | 6212 |
| 4 | முன்சீப் கோர்ட் கடைகள் | 9 | 187020 | 31170 |
| 5 | ஆவின் பாலகம், ரயில்வே பீடர் ரோடு | 1 | 13800 | 2300 |
| 6 | ஆண்டுக் குத்தகை இனங்கள் | 11 | 8542214 | 1423701 |
| | | | 10322798 | 1720465 |

**ஆ)** மேற்கண்ட அரசாணையின்படி கோவிட்–19 முழு ஊரடங்கு காலத்தில் செயல்பட்ட கீழ்க்கண்ட குத்தகை கடை இனங்களுக்கு 2 மாத காலத்திற்கு கடை வாடகையினை விலக்களிக்க இயலாது என்பதால் வாடகைத் தொகையினை வசூல் செய்யலாம்.

| வ.எண் | குத்தகை கடை வாடகை ஒதுக்கீட்டு எண் | குத்தகை வாடகைதாரர் பெயர் | வாடகை உபயோகம் |
|---|---|---|---|
| 1 | 117/1707 | வ.புகழகிரி | வடமலையான் மருந்துக் கடை |
| 2 | 117/1708 | பி.சந்திரா | வடமலையான் மருந்துக் கடை |
| 3 | 117/1703 | ஆர்.ரவி | மருத்துவ அவசர ஊர்தி (Ambulance) |

**அ.கு**

1. அ மற்றும் ஆ மன்றம் அனுமதிக்கலாம்.
2. குத்தகை/ ஏலத் தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருப்பின் எதிர்வரும் காலங்களில் ஈடுசெய்து கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.2244: அனுமதிக்கப்பட்டது.**

**ஆணையாளர்/தனிஅலுவலர்**
**திருமங்கலம் நகராட்சி.**